அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் – கழக பவள விழா - கழக முப்பெரும் விழாவையொட்டி

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் 21 திராவிடத் தொடர் நிகழ்ச்சிகள்!

## மாவட்ட வர்த்தக அணியினருக்கு லயன் பி.உதயசங்கர் வேண்டுகோள்!

சென்னை, செப். 25

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவாக 21 திராவிடத் தொடர் நிகழ்ச்சிகள் 24.09.2024 முதல் 24.10.2024 வரை ஒரு மாதம் முழுவதும் இரு மனங்கள் இணையும் திருமணங்கள், வேராய் இருக்கும் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழிகள், மக்கள் நலன் காக்கும் நலத்திட்டங்கள், நேயமிகு மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்டங்கள், குலம் காக்கும் கர்ப்பிணிகளுக்கு நல உதவிகள், சிந்தனையை சீர் செய்திடும் பொதுக்கூட்டங்கள், அறிவை மேம்படுத்தும் கருத்தரங்கங்கள், உடலை உறுதி செய்யும் மருத்துவ முகாம்கள், சமத்துவத்தை நிலைநாட்டும் விளையாட்டு போட்டிகள் என முத்திரைப் பதிக்கும் திராவிடத் திரு விழா நிகழ்ச்சி கள் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணித் தலைவர், மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், வர்த்தக அணி பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள் சென்னை கிழக்கு மாவட்டத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சிகளில் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப் பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தக அணி அமைப்பாளர் லயன் பி.உதயசங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஆவடி தொகுதியில் 605 பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, வழங்கினார்!

திருவள்ளூர் செப் 25

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட திருநின்றவூர் அரசின் மேல்நிலைப்பள்ளி திருவேற்காடு எஸ்.கே.டி.ஜெ. மேல்நிலைப்பள்ளி ஆவடி காமராஜர் நகர் ஆர்.சி.எம். மேல்நிலைப் பள்ளியில் ஆவடி மிட்னமல்லி அரசு மேல்நிலை பள்ளியில் தமிழ் நாடு பள்ளி கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ கலந்து கொண்டு 605 மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார் மாணவ மாணவிகள் தங்களது அறிவை வளர்த்துக் கொண்டு ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் முதலமைச்சர் அவர்கள் மருத்துவத்திற்கும் கல்விக்கும் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார் அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி சிறப்பு செய்து கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்கப் பள்ளியிலும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு பள்ளிக்கு வரும் மாணவ மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்து உள்ளார். எனவே எதற்காகவே நீங்கள் தயங்காமல் பள்ளிக்கு வருகை தந்து படிக்க வேண்டும் அது மட்டும் அல்லாமல் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத்துறைக்கு தனி அந்தஸ்து ஏற்படுத்தியுள்ளார். பள்ளி மாணவ மாணவிகளுக்கு பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை பங்கேற்று தங்களது திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இதில் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், நகர் மன்ற தலைவர்கள் என்.இ.கே.மூர்த்தி, உஷா ராணி ரவி, ஜி.ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், நகரச் செயலாளர் தி.வை.ரவி, பொன்.விஜயன், துணை தலைவர்கள் சரளா நாகராஜ், ஆனந்தி ரமேஷ், மீனாட்சி குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஏ.ஜெ.பவுல், வி.தியாகராஜன்,

பெ.வினோத், எஸ்.சங்கர், ஜெ.சரவணன், பாண்டுரங்கன், பரிச முத்து, அரசு, நடராஜ், குமாரசாமி, அசைதம்பி, பி.உமாபதி, செல்லதுரை, ஜெ.ஜேக்கப், சாது, சத்யா, சுதாகர், மனோகரன், பன்னீர் செல்வம், கே.பி.எஸ்.சுதாகர், இளங்கோ, ஜெகன், ரங்கா துரை, என்.ராஜி, பி.எல்.ஆர். யோகா, ஒய்.ஏ.தாஸ், சதீஷ், ஜெ.அன்பழகன், நாகராஜ், பாபு, கமலக்கண்ணன், குணசேகரன், ரவிச்சந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் தலைமை ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்கள் உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அயலக அணி எஸ்.எம்.செல்வம் தந்தை

# கழகத் தோழர் எஸ்.முனுசாமி மறைவு!

## இன்று இறுதி ஊர்வலம்!



சென்னை, செப். 25 -

சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எஸ்.எம்.செல்வத்தின் தந்தை எஸ். முனுசாமி வயது 96 அவர்கள் நேற்று (24.9.2024) 12.00மணி அளவில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இறுதிச் சடங்குகள்இன்று (25.9.2024) 106 -வது வட்டம் பாரி தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நுங்கம்பாக்கம் இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

# குன்றத்தூர் நகரக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## நகரக் கழகச் செயலாளர் கோ.சத்தியமூர்த்தி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், செப்.25

குன்றத்தூர் நகரக் கழகச் செயலாளர் கோ.சத்திய மூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகரக்கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (25 9 2024 புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் குன்றத்தூர் பஜார் சாலையில் அமைந்துள்ள பாலாஜி பவன் ஹோட்டல் மாடியில் நடைபெற உள்ளது.

நகரக் கழக அவைத் தலைவர் எம். சங்கர் தலைமையில் நடைபெறும் இச் செயற்குழுக் கூட்டத்தில் நகரக் கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: வருகிற 28.09.2024 காஞ்சிபுரத்தில் நடைபெறவுள்ள கழக பவள விழா முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள கழகத் தலைவர் வருகை தருவது குறித்து.

இவ்வாறு குன்றத்தூர் நகரக் கழக செயலாளர் கோ. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணிக்கு

# பகுதி/வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும் விவரம்!

## மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட திமுக பகுதி/ வட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விருப்பமுள்ள கழக தோழர்கள் கீழ்க்கண்ட விதிமுறைகள் படி விண்ணப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. விண்ணப்பிப்பவர்கள் பொறியியல் பட்டப்படிப்பு அதாவது BE/ Diploma/ITI நிறைவு செய்து இருக்க வேண்டும்.
2. விண்ணப்பிப்பவர்கள் அந்தந்த பகுதி, வட்டத்தில் வாக்காளராக இருப்பது மிகவும் அவசியம்.
3. பகுதி, வட்டத்திற்கு தலா ஒரு அமைப்பாளர் ஐந்து துணை அமைப்பாளர்கள் என்னும் எண்ணிக்கையில் பொறுப்புகள் வழங்கப்படுகின்றன.
4. இதில் ஒரு துணை அமைப்பாளர் அவசியமாக பெண் பொறியாளர் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
5. விண்ணபத்தில் இணைக்கப்பட்டுள்ள QR CODE வழியே பொறியாளரணியின் போர்ட்டல் வழியை மட்டும் விண்ணப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களை மாவட்ட கழக அலுவலகத்தில் அழைத்து நேரில் நேர்முகத் தேர்வு நடத்தப்படும்.

ஆகவே மேலே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதி செயலாளர்,வட்டக் கழக செயலாளர்கள், மற்றும் மாவட்ட அணியின் பொறியாளர் அணி அமைப்பாளர், ஆகியோர் மேற்கண்ட விதிமுறையின் படி விண்ணப்பங்களை இணைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி எல்லாபுரம் ஒன்றியத்தில் பெரியபாளையம் மற்றும் கன்னிகைப்பேர் அரசு மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு 225 விலையில்லா மிதி வண்டிகளை மாவட்ட கழக செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் பி.ஜெ.மூர்த்தி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ.குணசேகரன், ஆ.சத்தியவேலு, என்.கிருஷ்ணமூர்த்தி, க.சம்பத், வி.பி.ரவிக்குமார், கே.வி.வெங்கடாசலம், பாஸ்கர், தணிகாசலம், ஜெயலலிதா, சீனிவாசன், சித்ராமுனுசாமி, டில்லிசங்கர், சிவசங்கர், விஜய்பிரசாத், முகமது மெய்யதீன், எஸ்.முனுசாமி, இரா.அப்புன், ரவிசந்திரன், ஆனந்தன், நீதி, தினேஷ், நாராயணன், கே.அண்ணாமலை, இ.ராஜா, எஸ்.பாபு, சந்துருநாயுடு, டி.உமாபதி, வி.ஏ.தனசேகர், கே.வி.நாகராஜ், பரத்குமார், போண்டாசிவா எஸ்.கோவிந்தராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்

# கெஜல்நாயக்கன்பட்டி அரசு பள்ளி மாணவர்களுக்கு அரசின் மிதிவண்டிகள்

## க.தேவராஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்பத்தூர், செப். 25 -

திருப்பத்தூர் மாவட்டம், கந்தலி தெற்கு ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி MLA சிறப்பு அழைப்பாளராக கொண்டு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் கந்திலி தெற்கு செயலாளர் டி.அசோக்குமார், ஒன்றிய அவைத்தலைவர் துரைசாமி, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பார்த்திபன், சீனிவாசன், காதர் பாட்ஷா, லட்சுமணன், சிகாமணி, அன்புரோஸ், ராஜா, ஒன்றிய குழு உறுப்பினர் கோவிந்தன், அன்சர், ராஜேந்திரன், அனீஸ், சுரேஷ், முருகன், நவீன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும்

# பா.ஜ.க.வினர் தமிழ்நாட்டை மறந்துவிட வேண்டும்!

பா.ஜ.க. அரசின் பிரதமராக நரேந்திர மோடி முதல் முறையாக பொறுப்பு ஏற்க வந்தபோது பாராளுமன்றத் தின் படிக்கட்டுகளை தொட்டு வணங்கிய காட்சியை கண்டவர்கள் ஒரு தேநீர் கடை வைத்து நடத்தியவர் இந்திய பிரதமராக வந்திருப்பது தான் உண்மையான ஜனநாயகம். இந்த சாமானியர் மோடி விளிம்பு நிலை மக்களின் சிரமங்களை, இன்னல்களை உணர்ந்திருப்பார். எனவே இனி சாமானியர்கள், ஏழைகள் வாழ்வு மேம்படும் என்று மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் நடந்ததோ வேறு. மோடியின் நண்பர்கள் சாமானியர்களில் யாரும் இல்லை மாறாக உலக பணக்காரர்களின் வரிசையில் உள்ள அதானி, அம்பானிகள் போன்றவர்கள்தான் நண்பர்களாக இருந்து வருகின்றனர்.

அவர் ஒரு மணி நேரத்திற்கு ஒரு உடை உடுத்துகிறார். அதன் மதிப்பு ஒரு நாளைக்கான உடை மதிப்பு மட்டும் குறைந்தது பல லட்சத்திற்கு மேலாகத் தான் இருக்கும். இந்த மோடியைத் தான் சாமானியர் என்று மக்கள் நம்பினர்.

இங்கிலாந்து சென்று படித்து பாரிஸ்டர் பட்டம் பெற்ற மகாத்மா காந்தி கோட் மற்றும் சூட் போட்டிருந்தவர் மதுரை வந்த போது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள், ஏழைகள் சட்டை அணியாமல் வெறும் துண்டுகளை மட்டும் போட்டுக் கொண்டு வேலை செய்ததை பார்த்து அன்றைய நாள் முதல் உடலில் சட்டை போடாமலே வாழ்வின் இறுதிவரை வாழ்ந்து வந்தார். மோடி எங்கே? மகாத்மா காந்தி எங்கே? இதில் யார் எளிய மனிதர்?

ஒரு ஆண்டுக்கு மேல் மணிப்பூரில் ஒரு நீதிபதி தந்த தீர்ப்பால் பெரும்பான்மை மக்களாகிய மைதேயி மற்றும் ஒக்கி என கிறிஸ்தவ பழங்குடி இனத்தவர்களுக்கு இடையே கடும் மோதல் நடந்து பல படுகொலைகள் நடந்துள்ளன. கிட்டத்தட்ட 300 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அங்கு ஆட்சியில் இரு மாநில அரசு பா.ஜ.க அரசு. அதன் மாநில முதல்வரால் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. காவல் நிலையத்தில் உள்ள துப்பாக்கிகளை ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் தூக்கிச் சென்று மற்றொரு பிரிவினரை சுட்டுத் தள்ளுகின்றனர்.

பழங்குடி இனத்தைச் சேர்ந்த திரௌபதி முர்முவை குடியரசு தலைவராக்கியதை பெருமையாக பேசும் மோடி அரசு முர்மு கண் பார்வையிலேயே ஒக்கி இன பழங்குடியின மக்களைக் கொன்று குவித்து வருகிறது. பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு அளவே இல்லை. அதை தடுக்க மாநில அரசும் ஒன்றிய அரசும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குடியரசுத் தலைவர் முர்மு வாய் பேசாமல் மௌனியாகக் காட்சி தருகிறார்.



**வி.பி.கலைராஜன்**

*கழக இலக்கிய அணிச் செயலாளர்*

அந்த அம்மையாரை புதிய நாடாளுமன்றத் திறப்பு விழாவிற்கு அழைக்கவும் இல்லை அழைப்பிதழில் பெயரும் இல்லை முர்மு பா.ஜ.க காரராகவே இருந்த போதும் பா.ஜ.க.வின் அரசியல் ஆயுதமான அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவிற்கும் அழைக்கவில்லை. எந்த நாட்டிலாவது இப்படி முதல் மகளை அழைக்காமல் இருப்பார்களா? ஒரு ஜனாதிபதியை இதை விட மோசமாக எந்த நாடும் அசிங்கப்படுத்த முடியாது.

பொதுவுடமை சிந்தனையாளர் கார்ல் மாக்ஸ் இந்தியாவில் ஜாதி மக்களைப் பிரித்து வைத்திருக்கிறது என்றார். அதன்படி தான் குடியரசு தலைவர் முர்மு பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். அவர் அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால் புதிய நாடாளுமன்றமும், அயோத்தி கோயிலும் தீட்டாகிவிடும் என்பதை தவிர வேறு காரணம் என்னவாக இருக்க முடியும்?

ஆனால் அயோத்தி ராமர் கோயிலில் நடத்திய விழாவில் ஐந்து சங்கராச்சாரியார்களில் நான்கு பேர் கலந்து கொள்ளவில்லை. காரணம் என்ன? மோடியை சங்கராச்சாரியார்கள் பிரதமராக பார்க்கவில்லை சூத்திரனாகத்தான் பார்த்தனர். சூத்திரன் திறக்கும் ராமர் கோயிலுக்கு நாம் போவதா என்று புறக்கணித்தனர். இதை பாஜகவினரால் மறுக்க முடியுமா?

இதற்காகத் தான் மோடியைப் போன்றவர்களுக்காகவும் தந்தை பெரியார் மற்றும் அண்ணல் அம்பேத்கர் இறுதிவரை போராடினார்கள். அம்பேத்கர் ஒரு கட்டத்தில் புத்த மதம் சென்று விட்டார். ஆனால் தந்தை பெரியார் இந்து மதத்தில் இருந்து கொண்டே இறுதி மூச்சு வரை போராடினார்.

அந்த மணிப்பூர் மாநிலத்தில் மக்கள் தொகை 50 லட்சம் கூட இல்லை. இந்திய ராணுவத்திற்கு 6 லட்சம் கோடிக்கு மேல் செலவு செய்யும் இந்திய அரசு ராணுவத்தை அனுப்பி மணிப்பூர் கலவரத்தை ஏன் அடக்கவில்லை? சாகிறவர்கள் பழங்குடி கிறிஸ்தவ மக்கள் என்பதால் தானே.

தமிழ் மொழியை காத்திட களம் இறங்கி 1965ல் போராடிய மாணவர்களை அடக்கிட அன்றைய ஒன்றிய அரசு ராணுவத்தை அனுப்பி பலரை சுட்டுக் கொன்றது. இது கடந்த கால வரலாறு. இருந்தாலும் ராணுவத்தை எதிர்த்து சாதித்து வென்று பிரதமர் நேருவை இந்தியை திணிக்க மாட்டோம் என்று சொல்ல வைத்தவர்கள் திராவிட இயக்கத்தினர். குறிப்பாக தி.மு.க. இந்த வரலாற்று நிகழ்வு அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் எழுதப்பட்டுள்ளது.

அந்த மணிப்பூர் மாநிலத்திற்கு இன்று வரை பிரதமர் மோடி ஏன் செல்லவில்லை? அமித்ஷா சென்று என்ன சாதித்தார்? சொந்த மக்களையே பார்க்காத பிரதமர் மோடி பிறகு யாருக்காக இருக்கிறார்? சிறிய மாநில பிரச்சினையையே தீர்க்க முடியாத திறனற்ற அவர் தான் பிரதமர் மோடி.

இந்த பிரதமர் தமிழ்நாட்டுக்கு கல்விக்கு தரவேண்டிய முதல் தவணை நிதியையும் தரவில்லை. பேரிடர் நிதி கேட்டதையும் இதுநாள் வரை தரவில்லை. அப்படியானால் தமிழ்நாடும் மணிப்பூரும் இந்தியாவில் இல்லையா? அம்மாநில மக்கள் இந்தியர்கள் இல்லையா? கூறுங்கள் மோடி அவர்களே! பிரிவினை விதையை ஊன்ற முயற்சிக்காதீர்கள்.

இந்த ஜாம்பவான் மோடி தான் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடந்து வரும் உக்ரைன் ரஷ்யா யுத்தத்தை நிறுத்தப் போகிறாராம். அவரால் தான் முடியும் என்று பரப்புரை செய்கிறார்கள். உள்நாட்டிலேயே அவரால் ஓணான் பிடிக்க முடியவில்லை. இவர் போய் அயல்நாடுகளில் யானையைப் பிடிக்கப் போகிறாராம். இந்திரா காந்தி அல்ல நரேந்திர மோடி. இந்திரா போர் நடத்தி வங்காளதேசத்தை உருவாக்கினார். இவர் இதுவரை என்ன செய்து கிழித்தார்?

புல்வாமா தாக்குதலில் இந்திய ராணுவ வீரர்கள் 40 பேர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். கல்வான் பள்ளத்தாக்குதலில் இந்திய ராணுவ வீரர்கள் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். சீனர்கள் எத்தனை பேர் இறந்தார்கள் என்று மோடி அரசால் கூற முடியவில்லை. ஆனால் அமெரிக்கா 45 பேர் என்று கூறுகிறது இந்த லட்சணத்தில் தான் இந்திய உளவுப்பிரிவு உள்ளது. 4700 சதுர கிலோமீட்டர் இந்திய பகுதியை லடாக் பகுதியில் இரண்டு டெல்லி அளவு சீனா கைவசப்படுத்தி உள்ளது. இன்று வரை அருணாசல பிரதேசம் மாநிலத்திற்கு பிரதமர் மோடியும், அமித்ஷாவும் சென்றுவர முடியவில்லை. சீனா எதிர்ப்பு தெரிவிக்கிறது. அதனை கண்டிக்கக் கூட இரட்டையர்கள் மோடி மற்றும் அமித்ஷாவிற்கு ஏன் துணிச்சல் வரவில்லை?

அருணாசலப் பிரதேச வீரர் வீராங்கனைகள் இந்தியா சார்பாக சீனாவில் நடந்த ஆசிய போட்டியில் கலந்து கொள்ள சீனா அனுமதிக்கவில்லை. சீனாவை தட்டிக் கேட்டோ சமாதானமாக பேசியோ வீராங்கனைகளை கலந்து கொள்ள வைக்க முடியவில்லை. கையால் ஆகாத அரசாக மோடி மைனாரிட்டி அரசு இருந்ததை மற்ற நாடுகள் பார்த்து சிரித்தனர். வீராங்கனைகளுக்காக வருந்தினர். பிரதமர் மோடிக்கு அருணாசலப் பிரதேசம் எங்கள் மாநிலம் தான் என்று அடித்து சொல்லத் தைரியம் இல்லை.

பாகிஸ்தானில் இருந்து ஜூலை மாதத்திற்கு பிறகு காஷ்மீரில் 26 முறை தீவிரவாதிகள் இந்திய ராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். சுமார் 20 பேருக்கு மேல் இந்திய ராணுவத்தினர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அப்பாவி மக்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட லடாக் பகுதியில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுட்டு தள்ளியுள்ளனர். முக்கிய இந்திய இராணுவ தளபதி கொல்லப்பட்டுள்ளார்.

இதையெல்லாம் மோடி மறுக்க போகிறாரா? ஈழத் தமிழர்களை 3 லட்சம் பேருக்கு மேல் கொன்றொழித்த மகிந்த ராஜபக்சேவை அழைத்து விருந்து வைக்கிறார் மோடி. இதே போல் குஜராத்தியர்கள் 3 லட்சம் பேரை ஒருவர் கொன்று இருந்தால் அவருக்கு மோடி விருந்து வைப்பாரா? மாலத்தீவும் இந்தியாவை மதிக்கவில்லை. இலங்கை அம்பந்தோட்டா துறைமுகத்தை சீனாவுக்கு இலங்கை தாரை வார்த்து விட்டது. நேபாளம் கூட நமது நிம்மதியை குலைக்க பார்க்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் இருக்கிற பா.ஜ.கவின் மைனாரிட்டி அரசு எந்த நேரத்திலும் கவிழும் என்று பேசப்படுகிறது. இந்த மோடியை நம்பித்தான் ரஷ்யா உக்ரைன் போரை தீர்த்து வைப்பார் என்று பேசி வருகிறார்கள். எதை வைத்து இப்படி பேசுகிறார்கள் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

கோவை அன்னபூர்ணா ஹோட்டல் அதிபர் சீனி வாசனை வேண்டுமானால் மோடி அரசின் அமைச்சர் மிரட்டலாம். அவர் வேண்டுமானால் பயப்படலாம். இவரது ஆட்சியைத் தான் there is no religious freedom in India என்று வியட்நாமில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பேசி சென்றுள்ளார். இவர்கள் லட்சணம் இதுதான்.

எனவே மோடி வைத்திருக்கிற கத்தி வெண்ணையைக் கூட வெட்ட முடியாத கத்தி தான். இந்த கத்தியால் உக்ரைன் ரஷ்யா போரை நிச்சயம் நிறுத்த முடியாது. நடக்கவும் நடக்காது. இந்தியாவில் தயாரிக்கப்படும் ராணுவத் தளவாடங்கள் ஐரோப்பிய நாடுகள் மூலம் உக்ரைனுக்கு அனுப்பப்பட்டு ரஷ்யாவிற்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளதை தற்போது புதின் கண்டுபிடித்துள்ளார். ஏன் இந்த திருட்டுத்தனம்? மோடியா இனி ரஷ்யா உக்ரைன் போரை நிறுத்தப் போகிறார். இதுவும் ஒரு ஜூம்லா தான்.

சொந்த நாட்டில் 19 கோடி பேர் இரவு உணவு இல்லாமல் தவிக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் 97% மக்கள் மூன்று வேளையும் நல்ல உணவு உண்கிறார்கள். உலக பட்டினி நாடுகளில் இந்தியா 111-வது இடத்தில் உள்ளது கணக்கீட்டில் உள்ள 125 நாடுகளில் 111-வது இடம் தான் வளர்ச்சியா? 86 கோடி பேர் ரேஷன் கடைகளில் இலவச அரிசி மற்றும் உணவுப் பொருட்கள் பெற்று வருகின்றனர். வறுமை ஒழிந்து விட்டது என்றால் 86 கோடி பேர் யார்? இந்தியர்கள் இல்லையா? அந்நிய முதலீடு ஈர்ப்பதில் இந்தியா மே மாதம் 8வது இடத்தில் இருந்தது. தற்போது மோடி மைனாரிட்டி அரசின் ஆட்சியில் 15வது இடத்தில் உள்ளது. இதை நாம் சொல்லவில்லை United Nation conference on Trade and Developement அமைப்பு கூறியுள்ளது. இதை மோடி அரசு மறுக்கிறதா? 100 நாட்கள் மோடி அரசின் யோக்கியதையை எழுதினால் எழுதி எழுதி தள்ளலாம். மொத்தத்தில் மோடி அரசு தோட்டா இல்லாத துப்பாக்கி.

இந்த கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போதே பீகாரில் பட்டியல்யின மக்களின் ஏராளமான வாழ்விடங்கள் அவை என்ன மாளிகையா? இல்லை குடிசைகள் கொளுத்தப்பட்டன; பலர் உயிரிழந்துள்ளனர். மோடியின் நண்பர் நிதீஷ் குமார் எப்படிப்பட்ட நிலையான மனிதர். எப்பொழுது எங்கு தாவுவார் என்பதை பலமுறை காட்டிய பபூன். பிரதமர் மோடியை அழைத்துக் கொண்டு பாதிக்கப்பட்ட பட்டியல் இன மக்களைப் பார்ப்பாரா? இந்த ஒன்றிய அரசின் ஆட்சியில் பெண்களுக்கும் ஆதிதிராவிட பட்டியல் இன பழங்குடி மக்களுக்கும் நிச்சயம் பாதுகாப்பு இல்லை என்பதே உண்மை.

வேலைவாய்ப்பின்மை இந்தாண்டு மே மாதம் 7%மாக இருந்தது. தற்போது 9.2%மாக உள்ளது. இவர்கள் தான் வருடத்திற்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவோம் என்ற சத்தியப் புருஷர்கள். கடந்த பத்து ஆண்டுகள் மற்றும் இந்த 100 நாட்களில் எத்தனைப் பேருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று வெள்ளை அறிக்கை வெளியிடுவார்களா? வெள்ளை அறிக்கை என்றால் அவர்களுக்கு விளங்காது. நீங்கள் உங்களுக்கு பிடித்த காவி அறிக்கையையாவது தருவீர்களா?

தமிழர்களை வஞ்சிப்பவர்களே தமிழ்நாட்டை மறந்து விடுங்கள். தமிழர்களுக்கு எதிரான பல கட்சிகள் காணாமலே போய்விட்டன. இது தான் பா.ஜ.கவிற்கும் நடக்கும் என்று எச்சரிக்கின்றோம்.